செ.வெ.எண்: 476 நாள்: 22.07.2020

# இ-பாஸ் பெறாமல் வாகனங்களை வெளி மாவட்டங்களுக்கு இயக்கினால் நடவடிக்கை.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் இ-பாஸ் பெறாமல் வாகனங்களை வெளி மாவட்டங்களுக்கு இயக்கினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு கொரோனா வைரஸ் நோய் பரவலில் இருந்து பொது மக்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக மாநில மற்றும் மாவட்டங்களுக்கு இடையே வாகனங்களில் பயணிக்க அவசியம் இ-பாஸ் பெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்திற்குள் வரும் வாகனங்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு இ-பாஸ் பெறப்பட்ட வாகனங்களை மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

அதே போன்று புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து, வெளி மாவட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பேருந்து, மினிபஸ், மேக்ஸி கேப், டூரிஸ்ட் டாக்ஸி உள்ளிட்ட எவ்வித பயணிகள் வாகனங்களுக்கும் இ-பாஸ் பெற்ற பின்னரே இயக்க வேண்டும். இ-பாஸ் பெறாமல் இயக்கி பயணிகளுடன் மாவட்ட எல்லை சோதனை சாவடிகளில் பிடிபட்டால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் படி வாகன உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் மீது வழக்கு தொடரப்படும். மேலும் வாகன உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமம் மீது வட்டார போக்குவரத்து துறையின் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாவட்டத்திற்குள் இயக்கப்படும் வாகனங்களை பொறுத்தமட்டில் அத்தியாவசிய அல்லது அவசர தேவைகளுக்கு மட்டும் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையில் மட்டும் நபர்கள் பயணிக்கவும், முகக்கவசம், கையுறை பயன்படுத்துவதை தவறாமல் கடைப்பிடித்து பயணம் செய்ய அறிவுறுத்தப்படுகிறது. பொது மக்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை வாகன உரிமையாளர்கள் தவறாது பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், புதுக்கோட்டை**